# மகாராஷ்டிரத்தில் புலி சுட்டுக் கொலை: வன விலங்கு ஆர்வலர்கள் கோவையில் கண்டன ஊர்வலம்

கோவை, நவ. 11: மகாராஷ்டிர மாநிலத்தில் பெண் புலி சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து கோவையில் வன விலங்கு ஆர்வலர்கள் ஞாயிற்றுக்கிழமை கண்டன ஊர்வலம் நடத்தினர்.

மகாராஷ்டிர மாநிலம், யவத்மால் மாவட்ட வனப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில் கடந்த 2 ஆண்டுகளில் 13 பேர் புலி தாக்கி இறந்திருப்பதாகவும், அதற்கு அவ்னி என பெயரிடப்பட்ட பெண் புலி தான் காரணம் என்றும் கூறப்பட்டது. இதையடுத்து, அந்தப் புலியை உயிருடன் பிடிப்பதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அந்தப் புலி நவம்பர் 2ஆம் தேதி இரவு சுட்டுக் கொல்லப்பட்டது. இந்தச் சம்பவத்துக்கு மகாராஷ்டிர மாநில வன விலங்கு ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

மேலும், அவர்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக அவ்னி கொல்லப்பட்டதைக் கண்டித்து நாடு தழுவிய அளவிலான போராட்டத்துக்கு வன விலங்கு ஆர்வலர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.




கோவையில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்தில் பங்கேற்ற வன விலங்கு ஆர்வலர்கள்.

அதன்படி கோவையில் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி பகுதியில் இருந்து வ.உ.சி. மைதானம் வரையிலும் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது. ஹியூமன் அனிமல் சொசைட்டி எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் தொண்டு நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் மினி வாசுதேவன், ஒருங்கிணைப்பாளர் அல் போன்ஸ் சேவியர் ஆகியோரது தலைமையில் வன விலங்கு ஆர்வலர்கள் திரளானோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து, அவர்கள் கூறியதாவது:

பெண் புலி அவ்னியை மகாராஷ்டிர அரசு சட்டத்துக்குப் புறம்பாகச் சுட்டுக் கொலை செய்துள்ளது. அதை உயிருடன் பிடித்து இடமாற்றம் செய்வதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளாமல், கொலை செய்யும் நோக்கத்துடனேயே தொடர்ந்து நடந்து கொண்டனர். புலியை சுடுவதற்கு ஒருவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அனுமதி பெறாத மற்றொருவர் அதைச் சுட்டுள்ளார்.

மேலும், இரவு நேரத்தில் சுடக் கூடாது என்பது உள்ளிட்ட பல்வேறு சட்ட விதிகள் பின்பற்றப்படவில்லை. அத்துடன், அந்தப் புலியின் இரண்டு குட்டிகளையும் கண்டுபிடித்து, காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் மகாராஷ்டிர அரசு ஈடுபடவில்லை. அதைக் கண்டித்தும், இனி இது போன்ற நிகழ்வுகள் நாட்டில் எங்கும் நடைபெறக் கூடாது என வலியுறுத்தியும் இந்த ஊர்வலம் நடத்தப்படுகிறது என்றனர்.